## திருப்பூர் மத்திய மாவட்டம்

# திருப்பூர் தெற்கு மாநகரம், பெரிச்சிபாளையம் பகுதி 55, 55அ, 55ஆ ஆகிய வட்டங்களில் அடங்கியுள்ள வாக்குச்சாவடிகள் விவரம் மற்றும் வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகரம், பெரிச்சிபாளையம் பகுதி, 55, 55அ-வது வட்டம், 55, 55அ, 55ஆ ஆகிய

3 வட்டங்களாக பிரிக்கப்பட்டு, அந்த வட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச் சாவடிகள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

55வது வட்டம் : 170, 171, 175, 176, 177, 182, 183 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்.

**55வது வட்டப் பொறுப்பாளர்**

பொறுப்பாளர் : ஆதவன் ப.முருகேசன் , 13, பெரிச்சிபாளையம் வடக்கு, முதல் வீதி, திருப்பூர் - 641 604. க ளி மாநகர், மந்தவெளி.

55அ-வது வட்டம் : 172, 173, 198, 199, 201, 202 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்.

**55அ-வது வட்டப் பொறுப்பாளர்**

பொறுப்பாளர் : கு. கணேசன், 261, பட்டுக் கோட்டையார் நகர் 5வது வீதி, திருப்பூர் - 641 604.க ளி மாநகர், மந்தவெளி.

55ஆ-வது வட்டம் : 132, 174, 193, 194, 195, 203 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்.

**55ஆ-வது வட்டப் பொறுப்பாளர்**

பொறுப்பாளர் : இரா.முருகேசன் , 1/20, தென்னம்பாளையம் கிழக்கு, திருப்பூர் - 641 604.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திருப்பூர் தெற்கு மாவட்டம்

# உடுமலைப்பேட்டை வடக்கு, உடுமலைப்பேட்டை மத்திய, உடுமலைப்பேட்டை தெற்கு, உடுமலைப்பேட்டை கிழக்கு, உடுமலைப்பேட்டை மேற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட உடுமலைப்பேட்டை கிழக்கு, உடுமலைப்பேட்டை மேற்கு, உடுமலைப்பேட்டை மத்திய, ஆகிய 3 ஒன்றியங்கள், உடுமலைப்பேட்டை வடக்கு, உடுமலைப்பேட்டை மத்திய, உடுமலைப்பேட்டை தெற்கு, உடுமலைப்பேட்டை கிழக்கு, உடுமலைப்பேட்டை மேற்கு ஆகிய ஐந்து ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூர் கொண்டதாக அமையும். அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற ஒன்றியப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**உடுமலைப்பேட்டை வடக்கு ஒன்றியம்** : 1.பெரியகோட்டை, 2.சின்னவீரம்பட்டி, 3.குறிஞ்சிசேரி, 4.கணக்கம்பாளையம் ஆகிய 4 ஊராட்சிகள்.

**உடுமலைப்பேட்டை வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர்** : எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி. 5/1333-ஏ, 2வது வீதி, 2வது காலனி, காந்திநகர்-2, தாராபுரம் ரோடு, உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் - 642 126.

**உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியம்** : 1.பெரிபாப்பனூத்து, 2.அந்நியூர், 3.கணபதிபாளையம், 4.பூலாங்கிணர், 5.ராகல்பாவி, 6.ஆர்.வேலூர், 7.ஆலாம்பாளையம், 8.வடபூதநத்தம், 9.போடிபட்டி, 10.குரல்குட்டை, 11.குறிச்சிக்கோட்டை ஆகிய 11 ஊராட்சிகள்.

**உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியப் பொறுப்பாளர்** : க.செந்தில்குமார், 2/100-எல், சாந்தாமணி நகர், போடிபட்டி, உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் - 642 154.

**உடுமலைப்பேட்டை தெற்கு ஒன்றியம்:** 1.மொடக்குப்பட்டி, 2.ஜல்லிபட்டி, 3.சின்னகுமாரபாளையம், 4.பள்ளபாளையம், 5.மானுப்பட்டி, 6.தீபாலபட்டி, 7.பெரியவாளவாடி, 8.குருவப்பநாயக்கனூர், 9.தும்பலப்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் தளி பேரூர்.

**உடுமலைப்பேட்டை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர்** : எம்.ஆர்.பாபு . 1/70, மொடக்குப்பட்டி, உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் - 642 132.

**உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியம்:** 1.எலையமுத்தூர், 2.கல்லாபுரம், 3.ஆண்டியகவுண்டனூர், 4.கண்ணமநாயக்கனூர் ஆகிய 4 ஊராட்சிகள்.

**உடுமலைப்பேட்டை கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர்** : ஈ.கே.மாரிமுத்து. 1/52, அண்ணா நகர், எலையமுத்தூர், உடுமலைப்பேட்டை, திருப்பூர் - 642 154.

**உடுமலைப்பேட்டை மேற்கு ஒன்றியம்:** 1.செல்லப்பம்பாளையம், 2.தேவனூர்புதூர், 3.இராவணாபுரம், 4.புங்கமுத்தூர், 5.உடுக்கம்பாளையம், 6.எரிசினம்பட்டி, 7.கொடிங்கியம், 8.தின்னப்பட்டி, 9.கே.ரெட்டிபாளையம், 10.ஜெ.என்.பாளையம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**உடுமலைப்பேட்டை மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர்** : தி. செழியன் , 1/57-ஏ, காளியம்மன் கோவில் வீதி, தேவனூர்புதூர், உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் - 642 207.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மாவட்ட அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சமத்துவ பொங்கலை தொடங்கி வைத்து 500க்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு வழங்கி உறி அடி நிகழ்வில் பங்கேற்று பானையை உடைத்தார். உடன் கே.ஜெ.ரமேஷ், ம.ராஜி, டி.தேசிங்கு, நிவேதா ஜெசிகா, எஸ்.ஜெயபாலன், ம.கிரண், ஜி.விமல்வர்ஷன், ஆர்.செந்தாமரை ஜிசிசி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், டி.பிரியாகுமார், எஸ்.சதீஷ்குமார், யமுனா ரமேஷ், என்.லட்சுமி, ஜி.பிரவீன் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.15,000 ஆக உயர்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை. ஜன.15–

பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.12,500ல் இருந்து ரூ.15000 ஆக உயர்த்தப்படுவதாகவும், மே மாதத்தில் மட்டும் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களில் உடற்கல்வி 3700 பேர், ஓவியம் 3700 பேர், கணினி அறிவியல் 2 ஆயிரம் பேர், தையல் 1700 பேர், இசை 300, தோட்டக்கலை 20, கட்டிடக்கலை 60, வாழ்க்கைக்கல்வி 200 பேர் பணிபுரிகின்றார்கள்.

இவர்கள், போனஸ், மருத்துவக் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி, இறந்தோர் குடும்பத்திற்கு நிவாரணம், ஓய்வூதியம் உள்பட அரசின் சலுகைகள் இல்லாமல் பணிபுரிகின்ற தற்காலிக வேலையை நிரந்தர மாக்கவும், தற்போதைய ரூபாய் 12,500 தொகுப்பூதியத்தை மாற்றி காலமுறை சம்பளமாக வழங்க வலியுறுத்தியும் ஜனவரி 8ம் தேதி முதல் போராட்டத்தை சென்னை பள்ளிக்கல்வித்துறை வளாகத்தில் நடத்தி வருகின்றார்கள்.

போராட்டக் களத்தில், திமுக தேர்தல் வாக்குறுதி 181ல் சொன்னபடி முதல்வர் ஸ்டாலின் பகுதிநேர



ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என அவர்கள் ஓங்கி முழங்கி வந்தனர்.

”கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ரூ.35 ஆயிரம் கோடி, பொங்கல் போனஸ், பொங்கல் பரிசி வழங்க ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கி பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

இதை அரசு கொள்கை முடிவாக திமுக தேர்தல் வாக்குறுதி 181 ஐ அரசாணையிட்டு பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து, பொங்கல் போனஸ் வழங்கி முதல்வர் இதனை பொங்கல் பண்டிகை பரிசாக அறிவிக்க வேண்டும். என்று போராடிய ஆசிரியர்கள் கோரினர்.

இந்நிலையில், நேற்று (ஜன.14) காலை, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி பகுதி நேர ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முகாம் அலுவலகத்தில் காலை 11 மணியளவில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் பகுதிநேர ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதி களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எஸ்எஸ்ஏ திட்டத்தில் ரூ.3,548 கோடி மத்திய அரசிடம் இருந்து வர வேண்டியுள்ளது. அனால் மத்திய அரசு அதைத் தொடர்ந்து தர மறுக்கிறது. எனினும் ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் உறுதுணையாக அரசு இந்த செலவினங்களை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

தற்போது ஆசிரியர்களின் போராட்டம் எனக்கு கனத்த இதயத்தைத் தருகிறது என்று முதல்வரிடம் கூறினேன். பொங்கல் பண்டிகை நாளில் மகிழ்ச்சி என்பது வார்த்தையில் மட்டும் இல்லாமல் அவர்களுக்கு உண்மையாகவே மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்று விரும்பி அவர்களுக்கான ஊதியம் மேலும் ரூ.2500 உயர்த்தப்படுகிறது.

அதன்படி பகுதிநேர ஆசிரியர்களின் ஊதியம் ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் மே மாதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலையில் இனி மே மாதத்தில் ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்க உத்தரவிடப் பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஊடே இத்தனை காலத்தில் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பத்துக்கு அரசு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். அது குறித்து முதல்வரிடம் பேசியுள்ளேன். மருத்துவக் காப்பீடு தொடர்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்.

அதேபோல், பணி நிரந்தரம் என்பது அவர்களின் பிரதான கோரிக்கை. அது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும். என்று கூறினார்.

## தருமபுரி கிழக்கு மாவட்டம்
## மொரப்பூர் மேற்கு ஒன்றியம்

# கம்பைநல்லூர் பேரூர்க் கழக பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்டம், மொரப்பூர் மேற்கு ஒன்றியம், கம்பைநல்லூர் பேரூர்ச் செயலாளர் இ.மோகன் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக திரு. த. வடமலைமுருகன், (ஓம்சக்தி ஆப்செட், கம்பைநல்லூர், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம் - 635 202) அவர்கள் கம்பைநல்லூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர் கழகத்தின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திருப்பூர் மத்திய மாவட்டம்

# இச்சிப்பட்டி, மாணிக்காபுரம் ஆகிய ஊராட்சிகள் மாற்றியமைப்பு

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் தெற்கு ஒன்றியத்தில் உள்ள “இச்சிப்பட்டி ஊராட்சி” இனி, பல்லடம் கிழக்கு ஒன்றியத்திலும்;

பல்லடம் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள “மாணிக்காபுரம் ஊராட்சி” இனி, பல்லடம் தெற்கு ஒன்றியத்திலும் தொடர்ந்து செயல்படும்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி நகரம், 9வது வட்டத்தைச் சேர்ந்த கே.நாகூர்மீரான் மற்றும் ஆர்.அன்பரசு ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## இலங்கைக் கடற்படையின் தொடர் அராஜகம்:

# வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கண்டன அறிக்கை!

*குமரி, ஜன, 15-*

*இலங்கை கடற்படையின் தொடர் அராஜகத்திற்கு கழக மீனவர் அணி கண்டனம் தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து மீனவர் அணி செயலாளர் - மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “ஒன்றிய பாஜக அரசின் மெத்தனத்தால் இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து வருகிறது. அந்தவகையில் நேற்றும்*



*ராமேஸ்வரத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற பத்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.*

*கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, இந்த சம்பவம் தொடர்பாக தமிழக மீனவர்களை விரைந்து மீட்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.*

*ஒன்றிய அரசுக்கு, மீனவர்கள் மீட்பு விவகாரத்தில் நிர்வாக ரீதியாக அழுத்தம் தரும் அதேநேரத்தில் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் மீனவர்களின் துயர் துடைப்பதிலும் தொடர்ந்து அரணாக இருந்து வருகிறார்.*

*ஆனால் இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரம், நாகபட்டினம், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த தமிழக மீனவர்களை கைது செய்வது குறித்து ஒன்றிய மோடி அரசுக்கு துளிகூட அக்கறையோ, கவலையோ இல்லை. இந்நிலையில் தான் கழகத் தலைவரின் திராவிட மாடல் அரசு, மீனவர்களின் பொருளாதார சுமைக்கும் ஆறுதலாக இருக்கிறது*

*கடந்த 2024_2025 ஆம் நிதியாண்டையே எடுத்துக் கொண்டால் ராமேஸ்வரத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றதில் 48 விசைப்படகுகள், 6 நாட்டுப்படகுகள் என 54 படகுகள் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீட்பு முயற்சிகள் ஒருபக்கம் நடந்தாலும் கூட மீனவர்களின் துயரை துடைப்பதிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக்கவனமும், அக்கறையும் செலுத்தியதை மீனவர் சமூகம் நன்றியோடு நினைவுகூர்கிறது.*

*ராமநாதபுரம் மாவட்டத்தில் 2024 - 2025 ஆம் நிதியாண்டில் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு தலா 2 லட்சம் ரூபாய், விசைப் படகுகளுக்கு தலா 8 லட்ச ரூபாய் என 54 படகுகளுக்கு 3 கோடியே 96 லட்ச ரூபாய், முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அதேநேரத்தில் இலங்கை கடற்படையால் தமிழக மீனவர் கைது செய்வதையும், அதை தடுப்பதிலும் வேடிக்கை மட்டுமே பார்த்து மீனவ மக்களை வஞ்சித்துவரும் ஒன்றிய அரசைக் கண்டிக்கிறேன்.”*

*இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மாமியார்

# திருமதி. கே.பாலாமணி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 15–

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மாமியார் திருமதி. கே. பாலாமணி இயற்கை எய்திய தகவலறிந்து எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தொடர்பாக அமைச்சர் கயல்விழி செல்வராஜுக்கும் திருப்பூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜுக்கும் எனது ஆறுதலை தெரிவித்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## திருப்பூர் மத்திய மாவட்டம்

# திருப்பூர் தெற்கு மாநகரம், வாலிபாளையம் பகுதி 34அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகரம், வாலிபாளையம் பகுதி 34அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் அ.சுப்பிரமணி அவர்களுக்குப்பதிலாக என்.உதயகுமார் (34, பசும்பொன் வீதி, மண்ணரை, திருப்பூர் - 641 607.) அவர்கள் 34அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 14.1.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி மகளிர் அணி சார்பில் திராவிட பொங்கல் 2026 முன்னிட்டு நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா அ.ரேவதி தலைமையில், கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி மாவட்ட அமைப்பாளர் பானு சலீம், லட்சுமி உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பொங்கல் பரிசு வழங்கினார். உடன் வட்டக் கழக செயலாளர் தவநேசன், அ.தாஸ், மா.பா.அன்பு ,வெற்றி, கோ.கண்ணன் துரை பார்த்திபன்,பொன்னுசாமி, சாந்தி, செல்வி, வச்சலா, அன்னபூரணி, சாந்தி,மரியா, கலைச்செல்வி, கலையரசி, கிரிஜா, ராணி,பூங்கோடி, அன்புச்செல்வி, கிருஷ்ணவேணி,தங்கம், சுசீலா,தீபா மூர்த்தி, தட்சாயிணி, ஜமுனா,சாந்தகுமாரி மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.